இந்திய உச்ச நீதிமன்றம்

உரிமையியல் மேல்முறையீட்டு அதிகாரவரம்பு

உரிமையியல் மேல்முறையீடு எண் 9046/2019

(சிறப்பு அனுமதி மனு (உ) எண் 18110/2019-லிருந்து எழுகிறது)

கே. சிவராமன் மற்றும் பலர் ... மேல்முறையீட்டாளர்கள்

-எதிர்-

பி. சதீஷ்குமார் மற்றும் ஒருவர் ... எதிர்மேல்முறையீட்டாளர்கள்

தீர்ப்புரை

மாண்புமிகு நீதியரசர் முனைவர் திரு. தனஞ்ஜெய ஒய் சந்திரசூட்:

1. இந்த மேல்முறையீடு, மெட்ராஸ் உயர் நீதிமன்றத்தின் மதுரை அமர்வு நீதியர் ஈராயத்தின் 2017-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 1-ஆம் தேதியிடப்பட்ட தீர்ப்புரையிலிருந்து எழுகிறது. பணியாளர் இழப்பீட்டுத் துணை ஆணையரின் தீர்முடிவிலிருந்து எழுகின்ற மேல்முறையீட்டில், உயர் நீதிமன்றம், 1923-ஆம் ஆண்டு தொழிலாளர்கள் இழப்பீட்டு சட்டத்தின்[1] கீழ் செலுத்தத்தக்க இழப்பீட்டை ரூ.4,33,060/-லிருந்து ரூ.8,86,120/-ஆக உயர்த்தியது. உயர் நீதிமன்றம், விபத்து ஏற்பட்ட நாளிலிருந்து ஆண்டொன்றுக்கு 12% வட்டியை தீர்வளித்தது.

2. அரசமைப்புச் சட்டத்தின் வகுமுறைக்கூறு 136-இன் கீழ் தற்போது தொடரப்பட்ட வழக்கு நடவடிக்கைகளில், 2019-ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 26-ஆம் தேதியன்று அறிவிப்பு வழங்கப்பட்டது. மேல்முறையீட்டாளர்களின் சார்பாக முதல் மேல்முறையீட்டாளர் நேரடியாக முன்னிலையானதால், இந்நீதிமன்றம்,

---

1. "1923-ஆம் ஆண்டு சட்டம்"

2019-ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 26-ஆம் தேதியிடப்பட்ட அதன் உத்தரவின் மூலம் உச்ச நீதிமன்ற சட்டப் பணிகள் குழு மூலம் நீதிமன்ற உதவுநர் நியமிக்கப்பட வேண்டுமென உத்தரவிட்டது. அதற்கிணங்க கற்றறிந்த வழக்குரைஞர் திரு. எஸ். மகேந்திரன் நீதிமன்ற உதவுநராக நியமிக்கப்பட்டு, மேல்முறையீட்டிற்கு ஆதரவான அவரது வாதங்களை நாங்கள் கேட்டறிந்தோம்.

3. மேல்முறையீட்டாளர்கள், 2008-ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 31-ஆம் தேதியன்று விபத்தில் உயிரிழந்த தினேஷ் குமாரின் தந்தை, தாய், சகோதரி மற்றும் சகோதரர் ஆவர். விபத்து நாளன்று, உயிரிழந்தவர் 26 வயதுடையவர், மேலும் அவர் டிரெய்லர் லாரியில் ஓட்டுநராகப் பணிபுரிந்து வந்தார். இராஜஸ்தான், கோட்டா தேசிய நெடுஞ்சாலை 12-இல் வாகனத்தை ஓட்டிச்செல்கையில், எம்.ஹெறச். 19 இசட் 1696 என்ற பதிவு எண் கொண்ட ஒரு டிரக் எதிர்திசையிலிருந்து வந்து டிரெய்லர் மீது மோதியதன் விளைவாக தினேஷ் குமார் மரணமடைந்தார். விபத்து சமயத்தின்போது, இறந்தவர் முதல் எதிர்மேல்முறையீட்டாளரிடம் பணியாற்றி வந்தார். 2013-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 29-ஆம் தேதியன்று மதுரை, பணியாளர் இழப்பீட்டுத் துணை ஆணையர் முன்பு 1923-ஆம் ஆண்டு சட்டத்தின் கீழ் கோருரிமை மனு தாக்கல் செய்யப்பட்டது. 2014-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 26-ஆம் தேதியன்று ரூ.4,33,060/- தொகைக்கான தீர்வளிப்பின் மூலம் கோருரிமை மனு அனுமதிக்கப்பட்டது. துணை ஆணையர் எதிர்த்தரப்பினரின்றி வழக்கை மேல்நடத்தினார். இழப்பீட்டினை உயர்த்துவதற்காக மெட்ராஸ் உயர் நீதிமன்றத்தின் முன்பு மேல்முறையீட்டாளர்கள் மேல்முறையீடு[2] ஒன்றைத் தாக்கல் செய்தனர்.

---

2. உ.ப.மே. (எம்.டி.) 344/2014

4. உயர் நீதிமன்றம், 2015-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 23-ஆம் தேதியிடப்பட்ட அதன் தீர்ப்புரை மூலம் வழக்கு நடவடிக்கைகளைப் புதிதாக தீர்மானிக்கும்பொருட்டு துணை ஆணையருக்கு திருப்பியனுப்பியது. வழக்கு நடவடிக்கைகளைத் திருப்பியனுப்புகையில், மரணமுற்றவரின் மாத வருமானம் ரூ.32,000/- என நிரூபிக்கும்பொருட்டு, மேல்முறையீட்டாளர்கள், வருமானச் சான்றிதழ் வா.சா.ஆ.5-ஐ தாக்கல் செய்தபோதிலும், வருமானச் சான்றிதழை மெய்ப்பிப்பதற்காக பணியமர்த்துநர் சார்பாக சாட்சிகள் எவரும் விசாரிக்கப்படவில்லை என்பதை உயர் நீதிமன்றம் கவனத்திற்கொண்டது. ஆயினும், வா.சா.ஆ.5-க்கு ஆதரவாக, பணியமர்த்துநரின் சாட்சியை விசாரிப்பதற்கு ஓர் வாய்ப்பளிக்கப்படவேண்டும் என்ற மேல்முறையீட்டாளர்களின் வேண்டுகோளுக்கிணங்கி, உயர் நீதிமன்றம், நீதியின் நலன் கருதி, வழக்கு நடவடிக்கைகளைத் திருப்பியனுப்ப, அதனைப் பரிசீலித்தது.

5. திருப்பியனுப்பியதன்பேரில், மதுரை 2016-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 4-ஆம் தேதியிடப்பட்ட உத்தரவின் மூலம் (வேலையாள் இழப்பீட்டிற்கான ஆணையர்) இழப்பீட்டுத் தீர்வமாக தொகை ரூ.4,33,060/-ஐ நிலைநிறுத்தினார். திருப்பியனுப்பியதன்பேரில், ஆணையர் முன்பு, மரணமுற்றவரால் ஓட்டிவரப்பட்ட வாகனத்தின் உரிமையாளரான அ.சா.2-ஐ மேல்முறையீட்டாளர்கள் விசாரித்தனர். அவரது சாட்சியத்தின்போது, அவர் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளதாவது:

> "நான்தான், வே.இ. வழக்கு எண் 74/2011-இன் 1-ஆம் எதிர்மனுதாரர், இவ்வழக்கு, இந்நீதிமன்றத்தில் விசாரணையிலுள்ளது என்று எனக்குத் தெரியும். நான் நீதிமன்றத்திலிருந்து 3 முறை அனுப்பிய அழைப்பாணைகளைப் பெற்றுக்கொண்டேன். கடந்த இரண்டு

அழைப்பாணைகளின்போது, எனக்கு சொந்தமான லாரிகள் வேறு மாநிலங்களில் இயங்கிக்கொண்டிருந்ததாலும், நானும் அங்கு செல்லவேண்டியிருந்ததாலும், என்னால் நீதிமன்ற அழைப்பாணைக்கு வந்து சாட்சியமளிக்க இயலவில்லை. விபத்துக்குள்ளான டிரைலர் லாரி டி.என். 28 எ.பி. 1933 சதீஷ் குமாருக்கு சொந்தமானது. சிவராமனின் மகனான மரணமுற்ற தினேஷ் குமார், ஓட்டுநராக பணியாற்றினார். 2008-ஆம் ஆண்டில் (31.1.2008) பாண்டிச்சேரியிலிருந்து ராஜஸ்தானுக்குச் சென்றுகொண்டிருந்தபோது, கோட்டா நகரத்திற்குமுன் சிரோணியில் எதிரே வந்துகொண்டிருந்த டிரக் லாரி நேருக்குநேர் மோதியதில் விபத்து ஏற்பட்டது. விபத்து ஏற்பட்டதையடுத்து, நிகழ்விடத்திலேயே தினேஷ் குமார் உயிரிழந்தார். விபத்திற்கு முன்பு, அவர், சுமார் 3 ஆண்டுகளாக பணிபுரிந்துவந்தார். அவர் முறையான ஓட்டுநர் உரிமம் பெற்றிருந்தார். அவர் கனரக வாகனங்கள் ஓட்டுவதற்கான உரிமம் பெற்றிருந்தார். வா.சா.ஆ.5, மாத வருமானச் சான்றிதழ் என்னால் வழங்கப்பட்டது. அதில், சம்பளம் ரூ.25,000/-ஆக இருந்தாலும், நான் தினேஷ் குமாருக்கு (உணவு செலவினங்கள் உட்பட) மாதத்திற்கு ரூ.32,000/- அளித்துவந்தேன். விபத்தில் சம்பந்தப்பட்ட வாகனம், 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளரான, தி/ள். ரிலையன்ஸ் ஜெனரல் இன்சூரன்ஸ் நிறுவனத்துடன் முறையாக காப்பீடு செய்யப்பட்டிருந்தது. விபத்து சமயத்தில் காப்பீடு நடப்பிலிருந்தது."

6. ஆயினும், 1923-ஆம் ஆண்டு சட்டப்பிரிவு 4(1-ஆ)-இன் கீழ் வெளியிடப்பட்ட அறிவிக்கையின்படி, ஒரு நபரால் பெறப்படும் மாத ஊதியம் எதுவாயினும், பணியாளரின் மாத ஊதியத்தை கணக்கிடும்பொருட்டு மாதமொன்றுக்கு ரூ.4,000/-ஐ உச்சவரம்பாக நிர்ணயிப்பது என்பது தீர்ப்புரைக்கும் அதிகாரியின் அதிகாரவரம்பிற்குட்பட்டது என்பதன் அடிப்படையில் ஆணையர் வழக்கை மேல்நடத்தினார். மாத வருமானத்தை ரூ.4,000/-ஆக எடுத்துக்கொண்டு, ஆணையர், அட்டவணை IV-இன்படி (மரணமுற்றவரின் வயது 26-ஆக இருப்பதால்) பெருக்கப்படும் எண்ணாக 215.28-ஐ பயன்படுத்தி, ரூ.4,30,560/- என்ற தொகையை எட்டியதுடன், கூடுதல் தொகையான ரூ.2,500/-ஐ ஈமச்சடங்குக்கான செலவினமாகச் சேர்த்துள்ளார். மேல்முறையீட்டாளர்களுக்குச் செலுத்தக்கூடிய இழப்பீடாக தொகை ரூ.4,33,060 மொத்தமாகத் தீர்வளிக்கப்பட்டது.

7. உயர் நீதிமன்றத்தின் முன்பு தாக்கல் செய்யப்பட்டுள்ள மேல்முறையீட்டில், திருப்பியனுப்புகை உத்தரவைத் தொடர்ந்து, மரணமுற்ற பணியாளரின் மாத ஊதியம் ரூ.32,000/- என நிரூபிக்கப்பட்டிருந்தது என்ற பொருண்மையை நீதியர் ஈராயம் கருத்திற்கொண்டது. 2008-ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 31-ஆம் தேதியன்று விபத்து நடந்தபோதிலும், இழப்பீட்டுக்கான மனு 2011-ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 28-ஆம் தேதியன்று தாக்கல் செய்யப்பட்டு, 2016-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 4-ஆம் தேதியன்று ஆணையரால் தீர்மானிக்கப்பட்டதை உயர் நீதிமன்றம் கருத்திற்கொண்டது.

8. இதற்கிடையே, பின்வரும் நிபந்தனைகளுடன் 2010-ஆம் ஆண்டு மே திங்கள் 31-ஆம் தேதியன்று மத்திய அரசால் ஓர் அறிவிக்கை வெளியிடப்பட்டது:

"சி.ஆ. 1258(உ)- 1923-ஆம் ஆண்டு (எ/1923) பணியாளர் இழப்பீட்டுச் சட்டத்தின் பிரிவு 4-இன் உட்பிரிவு (1-ஆ)-இன்படி அளிக்கப்பட்டுள்ள

அதிகாரங்களைச் செயலுறுத்தி, மேற்படி பிரிவின் உட்பிரிவு (1)-இன் நோக்கத்தின்பொருட்டு, பின்வரும் தொகையான, அதாவது, ரூபாய் எட்டாயிரத்தை மாத ஊதியமாக குறிப்பிட்டு அதிகாரப்பூர்வ அரசு இதழில் அறிவிக்கை வெளியிடப்பட்ட நாள்முதல் அமலுக்கு வரும்படி மத்திய அரசு இதன்மூலம் குறிப்பிட்டது."

9. கேள்விக்குள்ளான சட்டம், சமூக நலன்பயக்கும் சட்டம் என்ற பொருண்மையைக் கவனத்திற்கொண்டு, மாதமொன்றுக்கு ரூ.8,000/-ஆக உயர்த்தப்பட்ட மாத வருமானத்தைக் கணக்கிடுவதற்கு அடிப்படையாகக் கொள்ளவேண்டும் என்பது உயர் நீதிமன்றத்தின் கருத்தாகும். ஆதலால் அட்டவணை IV-இன்படி பெருக்கல் எண்ணைப் பயன்படுத்தி, உயர் நீதிமன்றம் இழப்பீட்டை ரூ.8,86,120/-ஆக உயர்த்தியது.

10. இந்நீதிமன்றத்தின் முன்புள்ள மேல்முறையீட்டில், ஆணையர், மாதமொன்றுக்கு தொகை ரூ.4,000/- எனவும், உயர் நீதிமன்றம் மாதமொன்றுக்கு தொகை ரூ.8,000/- எனவும் பின்பற்றி, ஆணையரும், உயர் நீதிமன்றமும் என இருவருமே பிழைபுரிந்துள்ளனர் என்று கற்றறிந்த நீதிமன்ற உதவுநர் வலியுறுத்திக்கூறினார். 1923-ஆம் ஆண்டு சட்டத்தின் பிரிவு 4(1)(அ)-இன் வகையங்களின்படி, காயத்தின் விளைவாக மரணம் ஏற்பட்டிருந்தால், மரணமுற்ற பணியாளரின் மாத ஊதியத்தில் ஐம்பது சதவீதத்திற்கு நிகரான தொகையை உரிய பெருக்கல் எண்ணால் பெருக்கிவருவதே செலுத்தத்தக்க இழப்பீடாகும் என்று கற்றறிந்த நீதிமன்ற உதவுநர் பணிந்துரைத்தார். உரிய பெருக்கல் எண் அட்டவணை IV-இல் குறிப்பிடப்பட்டுள்ளது, விபத்து நாளன்று மரணமுற்றவரின் வயது 26-ஆக இருந்ததால், பெருக்கப்படும் எண் 215.28-ஆக இருக்கும். பிரிவு 4-இன் உட்பிரிவு (1-ஆ)-இன் கீழ் பணியாளருக்குரிய மாத ஊதியம்

அவசியமென கருதப்படுவதால் உட்பிரிவு 1-இன் நோக்கங்களைக் குறிப்பிட்டு அறிவிக்கை வெளியிட மத்திய அரசுக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது என்று கற்றறிந்த நீதிமன்ற உதவுநர் பணிந்துரைத்தார். ஆயினும், நிலுவையிலுள்ள அல்லது செலுத்தப்படவேண்டிய இழப்பீட்டுத் தொகையைக் கணக்கிடுவதில் அடிப்படையாக மாத ஊதியம் உள்ளது, அதனை உயர்த்தவோ அல்லது உச்சவரம்பை நிர்ணயிக்கவோ அறிவிக்கையில் குறிப்பிடப்படவில்லை என்று பணிக்கப்பட்டது. ஒரு பணியாளரின் உண்மையான ஊதியம், அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையைவிட மிகையாக இருப்பதாக நிரூபிக்கப்பட்டால், பிரிவு 4(1)(அ)-இன்படியாக நிரூபிக்கப்பட்ட மாத ஊதியத்தைப் பின்பற்றுவதில் தடையேதுமில்லை. 2009-ஆம் ஆண்டு சட்டப்பிரிவு 45, 2010-ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 18-ஆம் தேதிமுதல் நடைமுறைக்கு வந்துள்ளதோடு, பிரிவு 4[3]-க்கான விளக்கம் II-இன் கருத்தியல்வான வகையத்தை நீக்கியுள்ளதாக கற்றறிந்த வழக்குரைஞர் குறிப்பிட்டு, இந்த வாதத்திற்கு ஆதரவுகொடுத்தார். மேலும், ஊதியத்தைக் கணக்கிடும் முறையானது, பிரிவு 5-இல் குறிப்பிடப்பட்டுள்ளது என்று கற்றறிந்த நீதிமன்ற உதவுநரால் வலியுறுத்தப்பட்டது. தற்போதைய வழக்குக்கு பிரிவு 5-இன் கூறு (அ)-ஆனது ஈர்க்கப்படும், இதில் பணியாளர் ஒருவருக்கு விபத்து நிகழ்வதையடுத்து அவர் அதற்கு முன்னதாக பன்னிரெண்டு மாதங்களுக்கு மிகாமல் தொடர்ச்சியாக பணியமர்த்துநரிடம் பணியாற்றி வந்தார் என்று வலியுறுத்தப்பட்டது.

---

3. விளக்கம் II - ஒரு பணியாளரின் மாத ஊதியம் நான்காயிரம் ரூபாய்க்கும் மேலாக இருந்தால் சட்டக்கூறு (அ) மற்றும் சட்டக்கூறு (ஆ)-இன் நோக்கங்களுக்காக, அவரது மாத ஊதியம் ரூபாய் நான்காயிரமாகக் கருதப்படவேண்டும்.

11. கற்றறிந்த நீதிமன்ற உதவுநர், காலங்கடந்தநிலையில், **பிரதாப் நரேன் சிங் தியோ -எதிர்- ஸ்ரீநிவாஸ் சபதா**[4] *("பிரதாப் நரேன் சிங்")* மற்றும் **கேரளா ஸ்டேட் எலெக்ட்ரிசிட்டி போர்டு -எதிர்- வல்சலா கே**[5] *("வல்சலா")* என்ற வழக்குகளில் இந்நீதிமன்றத் தீர்ப்புரைகளை வேறுபடுத்திக்காட்டக் கோரியுள்ளார், அதில் 1923-ஆம் ஆண்டு சட்டத்தின் கீழ் செலுத்தத்தக்க இழப்பீட்டைத் தீர்மானிப்பதற்கான உரியநாள் என்பது விபத்து நிகழ்ந்த நாளாகும், மேலும், இழப்பீட்டுத் தொகையை உயர்த்துகின்ற சட்டத்திருத்தத்தின் பயன், சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு முன்பே நிகழ்ந்த விபத்துகளுக்குப் பொருந்தாது என்று தீர்மானிக்கப்பட்டது. இதற்கு ஆதரவளிக்கும் விதமாக, நீதிமன்ற உதவுநர், **நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட் -எதிர்- நீலகண்டன்** *("நீலகண்டன்")*[6] மற்றும் **நேஷனல் இன்ஷூரன்ஸ் கம்பெனி லிமிடெட் -எதிர்- முபாசிர் அஉறமது**[7] *("முபாசிர் அஉறமது")* போன்ற இந்நீதிமன்றத்தின் தீர்ப்புரைகளின்மீது சார்ந்துநின்றார்.

12. சட்டத்தின் பிரிவு 4(1)(அ), பின்வரும் வகையத்தைக் கொண்டுள்ளது:

"4. இழப்பீட்டுத் தொகை.- (1) இச்சட்டத்தின் வகையங்களுக்குட்பட்டு, இழப்பீட்டுத் தொகை பின்வருமாறு, அதாவது:-

(அ) காயத்தின் காரணமாக மரணம் நிகழ்ந்தால்	மரணமுற்ற பணியாளரின் மாத ஊதியத்தில் ஐம்பது சதவீதத்திற்கு நிகரான தொகையை, உரிய பெருக்கல் எண்ணைப் பெருக்கவேண்டும்; அல்லது தொகை ரூபாய் ஒரு இலட்சத்து இருபதாயிரம், இவற்றில் அதிகப்பட்சமாக இருப்பது;"

---

4. (1976) 1 எஸ்.சி.சி. 289.
5. (1999) 8 எஸ்.சி.சி. 254.
6. உரிமையியல் மேல்முறையீடு எண்கள் 16904-09/1996
7. (2007) 2 எஸ்.சி.சி. 349

13. மேற்படி வகையத்தின் விலக்குக்கூறில், மத்திய அரசு அதன் அதிகாரப்பூர்வமான அரசிதழில் அறிவிக்கை மூலமாக, அவ்வப்போது, சட்டக்கூறுகள் (அ) மற்றும் (ஆ)-இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இழப்பீட்டுத் தொகையை அதிகரிக்கலாம் என வரையறுக்கப்பட்டுள்ள சட்டக்கூறு (ஆ), காயத்தின் விளைவாக ஏற்படும் நிரந்தரமான முழு ஊனத்தை உள்ளடக்குகின்ற வழக்கைக் குறித்து விவாதிக்கிறது. "உரிய பெருக்கல் எண்" என்ற சொல்லமைப்பானது அட்டவணை IV-இல் குறிப்பிடப்பட்டுள்ள பெருக்கல் எண் குறித்து விளக்கம் I-இல் வரையறுக்கப்பட்டுள்ளது. 2009-ஆம் ஆண்டு சட்டப்பிரிவு 45-க்கு முன்பு, பிரிவு 4-இல் அடங்கியுள்ள விளக்கம் II பின்வருமாறு:

> "விளக்கம் II - பணியாளர் ஒருவரின் மாத வருமானம் ரூபாய் நான்காயிரத்திற்கு மேல் இருந்தால், கூறு (அ) மற்றும் கூறு (ஆ)-இன் நோக்கத்திற்காக அவரது மாத ஊதியம் நான்காயிரம் ரூபாயாகக் கருதப்படவேண்டும்."

14. 2010-ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 18-ஆம் தேதியன்று நடைமுறைக்கு வந்துள்ள 2009-ஆம் ஆண்டு சட்டப்பிரிவு 45-இன் மூலம் விளக்கம் II நீக்கப்படவேண்டியதாகிறது. உட்பிரிவு (1-ஆ) பிரிவு 4-இல் அறிமுகப்படுத்தப்பட்டு, அது பின்வருமாறு எடுத்தியம்பப்பட்டுள்ளது:

> "(1-ஆ) மத்திய அரசு, அதன் அதிகாரப்பூர்வமான அரசிதழில் அறிவிக்கை மூலம், உட்பிரிவு (1)-இன் நோக்கத்திற்காக பணியாளருக்கான அந்த மாத ஊதியத்தை அவசியமானதென கருதுமானால் அதைக் குறிப்பிடலாம்."

15. இந்நீதிமன்றத்தின் முன்பு உள்ள கேள்வி யாதெனில், ஒரு பணியாளரின் மாத ஊதியம் ரூ.*4,000/-* என்ற உச்சவரம்பை நிர்ணயிக்கின்ற விளக்கம் II-இன் கருத்தியலான வகையத்தை நீக்குகின்ற, *2009*-ஆம் ஆண்டு சட்டப்பிரிவு *45*-இன் பயனை, இறுதித் தீர்ப்பு நிலுவையிலிருந்தாலும், அதன் வகையங்கள் செயல்பாட்டிற்கு வருவதற்கு முன்னதாக அதாவது *2010*-ஆம் ஆண்டு ஜனவரி *18*-க்கு முன்னர் விபத்து நிகழ்ந்திருந்தால் அதற்கு அது பொருந்தத்தக்கதா*?* என்பதாகும். *2009*-ஆம் ஆண்டு சட்டப்பிரிவு *45*, முன்தேதியிட்டு பொருந்தத்தக்கதா*?* என்பதை மதிப்பிடுவதற்கு, இந்த நீதிமன்றத்தின் தொடர்புடைய முன்தீர்ப்புகளைப் பகுப்பாய்வு செய்வது அவசியமாகும். **பிரதாப் நரேன் சிங்** என்ற வழக்கில் முதல் எதிர்மேல்முறையீட்டாளர், மேல்முறையீட்டாளரிடம் பணியாற்றிவந்தார், பணிபுரிந்துகொண்டிருக்கும் சமயத்தில் அதன் நிமித்தமாக காயமுற்றார். செலுத்தத்தக்க இழப்பீட்டுத் தொகை *1923*-ஆம் ஆண்டு சட்டப்பிரிவு *19*-இன்படி ஆணையரால் "தீர்வு செய்யப்படும்" வரையில் நிலுவையிருந்ததாகிவிடாது என்பதால், *1923*-ஆம் ஆண்டு சட்டப்பிரிவு *4அ(3)*-இன் கீழ் மேல்முறையீட்டாளருக்கு அபராதம் விதித்ததில் ஆணையர் சட்டப்படி பிழைபுரிந்துவிட்டார் என்று வாதுரைக்கப்பட்டது. பிரிவு *4*-அ எடுத்துரைப்பதாவது:

> *"4(அ).* நிலுவையிலிருக்கும்போதும் மற்றும் தவறுகைக்காகவும் அபராதமாகச் செலுத்தப்படவேண்டிய இழப்பீட்டுத் தொகை.-
>
> *(1)* பிரிவு *4*-இன் கீழான இழப்பீட்டுத் தொகை, நிலுவையாகிவிட்ட உடனேயே செலுத்தப்படவேண்டும்.
>
> *(2)* கோரப்பட்ட அளவுக்கான இழப்பீடு செலுத்தும் கடப்பாட்டை பணியமர்த்துநர் ஏற்காத நேர்வுகளில், அவர்

தற்காலிகமாகச் செலுத்துவதற்கு ஒப்புக்கொள்ளும் அளவுக்கான கடப்பாட்டின் அடிப்படையில் வழங்குவதற்குரியவராவார். மேலும், அத்தொகையை மேல் கோரிக்கைக்கு உரிமைக்கோரும் பணியாளரின் உரிமைக்கு பாதிப்பு ஏற்படாவண்ணம் நேர்வுக்கேற்ப ஆணையரிடம் வைப்பீடு செய்யவேண்டும் அல்லது பணியாளரிடமும் அளிக்கப்படலாம்.

(3) பணியமர்த்துநர் ஒருவர், சட்டப்படி நிலுவையிலுள்ள இழப்பீடு நிலுவையான நாளிலிருந்து ஒரு மாதத்திற்குள் செலுத்தத்தவறும்பட்சத்தில், ஆணையர் -

(அ) நிலுவைத் தொகையோடு அதற்கு ஆண்டுக்கு 12 சதவீதம் தனிவட்டியோ அல்லது நிலுவைத் தொகையின்பேரில், மத்திய அரசு அதன் அதிகாரப்பூர்வ அரசிதழில் அறிவிக்கையின் மூலம் குறிப்பிடலாகும் அட்டவணையிடப்பட்டுள்ள ஏதேனும் வங்கியில் பெறப்படும் அதிகபட்ச கடன்தொகைக்கான வீதத்துக்கு மிகாமல் அத்தகைய அதிகபட்ச வீதத்தையோ சேர்த்து பணியமர்த்துநர் செலுத்தவேண்டுமென உத்தரவிட வேண்டும்; மற்றும்

(ஆ) அவரது கருத்துப்படி, தாமதத்தை நியாயப்படுத்துவதற்கான காரணமேதுமில்லை என்றால், நிலுவைத் தொகையுடன் அதற்கான வட்டிசேர்த்து அத்தொகையில் 50 சதவீதத்திற்கு மிகாத தொகையைத் தண்டத் தொகை வாயிலாக கூடுதலாகச் செலுத்த பணியமர்த்துநருக்கு உத்தரவிடவேண்டும்...."

16. பிரிவு 4அ(1)-இன்படி "இழப்பீடு நிலுவையான உடனேயே" பிரிவு 4-இன் கீழ் அது செலுத்தத்தக்கதாகும். பிரிவு 4அ(2)-ஆனது, பணியமர்த்துநர், காயமுற்ற பணியாளருக்கு இழப்பீடுச் செலுத்தும் பொறுப்புரிமையை ஏற்றுக்கொண்டபோதிலும், செலுத்தத்தக்க இழப்பீட்டின் அளவை மறுத்துரைக்கும் சூழ்நிலை குறித்து கருத்துரைக்கிறது. அவ்வாறான நேர்வுகளில், உட்பிரிவு (2), ஆணையரிடம் வைப்பீடு செய்யவோ அல்லது பணியாளரிடம் நேரடியாகச் செலுத்தவோ ஒப்புக்கொள்ளப்பட்ட அளவுக்கு அத்தொகையைச் செலுத்தும் பொறுப்புரிமையின் அடிப்படையில் தற்காலிகத் தொகையைச் செலுத்த பணியமர்த்துநருக்கு உத்தரவிடுகிறது. பிரிவு 4அ(3), பணியமர்த்துநர் இழப்பீடு நிலுவையான நாளிலிருந்து ஒரு மாதத்திற்குள் அதைச் செலுத்தத் தவறியிருந்தால், தொகை செலுத்துவதில் நியாயமற்ற தாமதம் ஏற்பட்டிருக்கும் பட்சத்தில், நிலுவையான அத்தொகையை வட்டியோடு கூடுதல் தொகையையும் சேர்த்து செலுத்த உத்தரவிடுவதற்கு ஆணையருக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடுகிறது. சட்டத்தின் பிரிவு 19 எடுத்துரைப்பதாவது:

"19. ஆணையர்களுக்கு குறித்தனுப்புதல்.- (1) இழப்பீடு செலுத்துவது தொடர்பாக ஏதேனும் நபரின் பொறுப்புரிமை குறித்து இச்சட்டத்தின் கீழான ஏதேனும் நடவடிக்கைகளில் ஏதேனும் பிரச்சினை எழுப்பப்படுமானால், காயமடைந்த நபர் பணியாளரா? இல்லையா? அல்லது இழப்பீட்டுத் தொகை அல்லது அதன் காலஅளவு குறித்த ஏதேனும் பிரச்சினை உட்பட (உடல் ஊனத்தின் தன்மை அல்லது அளவு குறித்த ஏதேனும் பிரச்சினை உட்பட) அப்பிரச்சினையில் உடன்பாடு ஏற்படவில்லை என்றால் ஆணையரால் தீர்வுகாணப்படுதல்வேண்டும்....."

17. சட்டத்தின் கீழ் ஏதேனும் நடவடிக்கையில் எழுகின்ற பிரச்சினை எதிலும் உடன்பாடு ஏற்படவில்லை என்றால் ஆணையரால் தீர்வு காணப்படுதல்வேண்டும் என்று பிரிவு 19 வரையறுக்கிறது. இந்நீதிமன்றத்தின் நால்வர் அமர்வு நீதியராயம், மேல்முறையீட்டாளரால் வலியுறுத்தப்பட்ட வாதத்தை நிராகரித்து, விபத்து ஏற்பட்ட நாள்முதல் இழப்பீடு "நிலுவையாகிறது" எனத் தீர்மானித்தது. அதன்பின்னர், உரிமைக் கோரிக்கையைத் தீர்வு செய்வதற்கு முன்பான காலத்திற்கோ அல்லது இழப்பீடு முழுவதையும் செலுத்துவதில் நியாயமற்ற தாமதம் ஏற்பட்டிருந்தாலோ அதற்கு வட்டி அல்லது தண்டம் விதிப்பதற்கு ஆணையருக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. நீதிமன்றம் தீர்மானித்ததாவது:

"18. ....ஆகவே, ஒரு விபத்து அதுவும் மறுப்புக்கிடமின்றி பணிபுரிந்துகொண்டிருக்கும்போது அதன் நிமித்தமாக பணியாளருக்கு மேற்சொன்ன உடற்காயம் ஏற்பட்ட

சமயத்திலேயே பணியமர்த்துநர் இழப்பீடு அளிப்பதற்குப் பொறுப்புடையவராகிவிடுகிறார். எனவே, பிரிவு 19-இன் கீழ் 1969-ஆம் ஆண்டு மே திங்கள் 6-ஆம் தேதியிடப்பட்ட ஆணையரின் ஆணைக்குப் பின்னர் இழப்பீடு நிலுவையாகவில்லை என்று வாதுரைப்பது பயனற்றதாகும். இந்த பிரிவு என்ன வகைசெய்கிறதென்றால், இழப்பீடு அளிக்கும் எந்த நபரின் பொறுப்புரிமை குறித்தோ அல்லது இழப்பீட்டுத் தொகை அல்லது அதன் காலஅளவு குறித்தோ இச்சட்டத்தின் கீழான நடவடிக்கை எதுவும் குறித்தோ பிரச்சினை ஏதும் எழுமானால், அதில் உடன்பாடு ஏற்படாதநிலையில் ஆணையரால் தீர்வு செய்யப்படுதல் வேண்டும். ஆகவே, காயத்தைப் பொறுத்து, பிரிவு 3-இன் கீழ் இழப்பீடு அளிக்கும் பணியமர்த்துநரின் பொறுப்புரிமை, பிரிவின்படி குறிப்பிடப்பட்ட தீர்வுக்காணப்படும் வரையில் நிறுத்திவைக்கப் பட்டுள்ளது என்ற வாதத்தை நியாயப்படுத்துவதற்கு ஏதொன்றுமில்லை....

19. ஆதலால், எதிர்மேல்முறையீட்டாளருக்கு மேற்சொன்ன உடற்காயம் ஏற்பட்ட சமயத்திலேயே மேல்முறையீட்டாளர் இழப்பீடு அளிப்பதற்கு பொறுப்புடையவராகிறார், இதற்குமாறாக வாதுரைப்பது நியாயமல்ல. எதிர்மேல்முறையீட்டாளருக்கு உடற்காயம் ஏற்பட்ட சமயத்திலேயே பிரிவு 4-இன் கீழ் வகைசெய்யப்பட்ட வீதத்தில் இழப்பீடு அளிப்பது, சட்டப்பிரிவு 4அ(1)-இன் கீழ் மேல்முறை-யீட்டாளரின் கடமையாகும். அவர் அவ்வாறு செய்யத்தவறிவிட்டார்.

மிகமோசமான நிலை யாதென்றால், அவர் பிரிவு 4-இன் உட்பிரிவு (2)-இன் கீழ் குறிப்பிட்டுள்ளபடி தற்காலிகமாகக்கூட தொகை அளிக்கவில்லை என்றும், மேலும் எதிர்மேல்முறையீட்டாளர் தற்காலிக ஒப்பந்ததாரர் என்றும், அவரது கவனக்குறைவின் காரணமாகவே விபத்து நிகழ்ந்தது என்ற பொய்யான வாதங்களை எடுத்துரைக்கும் அளவிற்கு அவர் சென்றுவிட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்பின்னர், இழப்பீடு பெறுவது தொடர்பாக எதிர்மேல்முறையீட்டாளரின் நேரடியான அணுகுமுறைக்கும் அவர் செவிசாய்க்கவில்லை என்ற பொருண்மையும் உள்ளது. உரிமைக் கோரிக்கையைத் தீர்வு செய்வதற்காக ஆணையரிடம் விண்ணப்பிக்கும்படியான கட்டாயத்திற்கு எதிர்மேல்முறையீட்டாளர் தள்ளப்பட்டுள்ளார் என்பதை நினைவில்கொண்டு, ஆணையரின் அதிகாரவரம்பு குறித்த தேவையற்ற ஆட்சேபணையை மேல்முறையீட்டாளர் எழுப்பியிருந்தாலும், முற்றிலும் போதாத ஒன்றாகக் கருதப்படுகின்ற தொகைக்கான கோரிக்கையைத் தீர்வு செய்கின்ற ஒப்பந்த விவரக் குறிப்பைத் தாக்கல் செய்யும் பொறுப்பு எதிர்மேல்முறையீட்டாளருக்கு மேலோங்கியிருந்தாலுங்கூட, அது, ஆணையரால் நிராகரிக்கப்பட்டது. இத்தகைய பொருண்மைகள் மற்றும் சூழ்நிலைகளில், வட்டித் தொகை மற்றும் தண்டத் தொகையைச் செலுத்துவதற்கு ஆணையர்

உத்தரவிட்டதில் முற்றிலும் நியாயப்படுத்தப்பட்டுள்ளார் என்பதில் எங்களுக்கு ஐயமேதுமில்லை."

18. சட்டப்பிரிவு 19-இன் கீழ் உரிமைக் கோரிக்கைகளையும் மறுப்புரைகளையும் தீர்மானிப்பதற்கு அச்சட்டம் ஆணையருக்கு அதிகாரம் அளித்திருந்தபோதிலும், பணியமர்த்துநருக்கும், பணியாளருக்கும் இடையேயான பிரச்சினைக்குரிய சூழ்நிலையில் செலுத்தவேண்டிய தொகையை ஆணையர் தீர்வு செய்யாதவரையில், காயமுற்ற பணியாளருக்கு இழப்பீட்டைச் செலுத்தும் பொறுப்புரிமை நிறுத்திவைக்கப்படாது என இந்நீதிமன்றம் தீர்மானித்துள்ளது. 1923-ஆம் ஆண்டு சட்டத்தின் கீழ் வேண்டுறுத்தப்பட்டுள்ளவாறு இழப்பீட்டைச் செலுத்துவதற்கான பொறுப்புரிமை எப்போது எழுகின்றது என்பதை பிரிவு 4(அ) விவாதிக்கிறது. 1923-ஆம் ஆண்டு சட்டப்பிரிவு 4(அ)-இன் நோக்கங்களுக்காக விபத்து ஏற்பட்ட நாளன்றே இழப்பீட்டைச் செலுத்துவதற்கான பொறுப்புரிமை எழுகிறது. பணியமர்த்துநர் செலுத்தவேண்டிய இழப்பீட்டின் அளவை எதிர்த்துரைத்தால், உரிமைக் கோரிக்கையின் தீர்வளிப்பு நிலுவையிலுள்ளநிலையில், ஆணையரிடமோ அல்லது பணியாளரிடமோ தற்காலிகத் தொகை செலுத்த வற்புறுத்தப்படுகிறது. பணியமர்த்துநர் அற்பமான காரணங்களின்பேரில் பணம் செலுத்துவதில் தேவையற்ற தாமதம் செய்வதையோ அல்லது இழப்பீடு செலுத்துவதை உறுதியாக நிறைவேற்றும்படியான அதன் பொறுப்புரிமையிலிருந்தோ தப்பித்துவிடமுடியாது என்பதை இது உறுதிசெய்கிறது.

19. **நீலகண்டன்** என்ற வழக்கில், 1923-ஆம் ஆண்டு சட்டத்திருத்தம் அமல்படுத்தப்படுவதற்கு முன்பு விபத்து நடந்திருந்தது, அதன்படி கருத்தியல்வான வருவாய் ரூ.1000/-லிருந்து ரூ.2000/-ஆக உயர்த்தப்பட்டிருந்தது. இந்த நீதிமன்றத்தின் முன்புள்ள கேள்வி யாதெனில், செலுத்தக்கூடியத் தொகை குறித்த இறுதித் தீர்ப்பு

நிலுவையிலுள்ளபோது, சட்டத்திருத்தம் நடைமுறைக்கு வருவதற்கு முன்பு நிகழ்ந்த விபத்துகளுக்கும் அதன் பயன் விரிவுபடுத்தப்படுமா? என்பதாகும். பிரச்சினைக்குரிய விபத்து 1981-ஆம் ஆண்டுக்கு முன்பு நிகழ்ந்திருந்தாலும், பின்வருவனவற்றில் சட்டத்திருத்தம் நடைமுறைக்கு வருவதற்கு முன்பு நிகழ்ந்த விபத்துகளுக்கு சட்டத்திருத்தத்தின் பயனானது பொருந்தத்தக்கது என்று இந்நீதிமன்றத்தின் இருவர் அமர்வு நீதியராயம் தீர்மானித்துள்ளது:

> "சட்டப்பிரிவு 4, 1995-ஆம் ஆண்டு சட்டத்திருத்தத்தின் பிரிவு 30-இன் மூலம் திருத்தியமைக்கப்பட்டுள்ளது என்பதில் ஆட்சேபனை ஏதுமில்லை, அதன்படி, கருத்தியல்வான வருவாயானது ரூ.1000/-லிருந்து ரூ.2000/-ஆக உயர்த்தப்பட்டுள்ளது. காப்பீட்டு நிறுவனத்தின் கற்றறிந்த வழக்குரைஞர், 1981-ஆம் ஆண்டு விபத்து நிகழ்ந்ததால், அந்த தேதியன்று நடைமுறையில் இருந்த சட்டமே பொருந்தத்தக்கது என்றும், அவ்வகையில் சட்டத்திருத்தத்தின் பயனைப்பெறுவதற்கு தொழிலாளர் உரிமையுடையவரல்லர் என்றும் திட்டவட்டமாக வாதுரைத்தார். நாங்கள் கற்றறிந்த வழக்குரைஞரின் வாதத்துடன் ஒத்துப்போகவில்லை. **இறுதியாக இன்று நாங்கள் தொழிலாளரின் உரிமையைத் தீர்மானிக்கின்றோம். இந்த சட்டம், தொழிலாளிக்கு பயனளிக்கின்ற ஒரு சிறப்புச் சட்டமாகும். இச்சட்டத் திட்டமுறையைக் கருத்திற்கொண்டு பார்த்தால், சட்டத்திருத்தத்திற்கு அளிக்கப்படக்கூடிய ஒரே பொருள்விளக்கம் யாதெனில், தொழிலாளருக்கு பயன் ஏதும் அளிக்கப்பட்டு, அப்பயன், வழக்கு**

இறுதியாகத் தீர்வு செய்யப்படும் நாள்முதல் கிடைக்கக்கூடியது என்பது திருத்தத்துக்கு கொடுக்கப்படக்கூடிய ஒரே பொருள்விளக்கம் என்றாலும், அப்பயனை தொழிலாளர்களுக்கு விரிவுபடுத்தவேண்டும் என்பதே எங்களது கருத்தாகும். எனவே, தொழிலாளர் பெறும் உள்ளபடியான ஊதியம் ரூ.1800-ஐ அடிப்படையாகக்கொண்டு கணக்கிடப்பட்டுள்ள தொகையை, தொழிலாளரின் வாரிசுகளுக்கு இழப்பீடாகச் செலுத்தவேண்டும் என்று நாங்கள் தீர்மானிக்கிறோம்..."

(வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளது)

20. 1923-ஆம் ஆண்டு சட்டமானது, பணியாளர்களின் நலனுக்கான சமூக நலச் சட்டமாகும் என்று நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது. அதன்விளைவாக, சட்டத்திட்டத்தைக் கருத்திற்கொண்டு, உரிமைக்கோரிக்கையை இறுதியாகத் தீர்வு செய்யும் நாளன்று பணியாளருக்குரிய பயனை விரிவுபடுத்துகிற ஒரு பொருள்விளக்கத்தை நீதிமன்றம் பின்பற்றவேண்டும். ஒரு வழக்கு இறுதித் தீர்ப்புக்காக நிலுவையிலுள்ளபோது, இழப்பீடாகச் செலுத்தவேண்டிய இழப்பீட்டுத் தொகையை உயர்த்தி சட்டத்திருத்தம் நிறைவேற்றப்பட்டால், உயர்த்தப்பட்ட தொகையானது, செலுத்தவேண்டிய இழப்பீட்டின் அளவைத் தீர்மானிப்பதற்கு பொருந்தக்கூடியது. **நீலகண்டன்** என்ற வழக்கில் வகுக்கப்பட்ட சட்ட நிலைப்பாட்டை இந்நீதிமன்றத்தின் அடுத்துவரும் நீதியராயம் எவ்வாறு கையாண்டது என்பது கற்றறிந்த நீதிமன்ற உதவுநரால் முன்வைக்கப்பட்ட பணிந்துரையில் தெளிவாக இல்லை.

21. **வல்சலா** என்ற வழக்கில், இந்நீதிமன்றத்தின் மூவர் அமர்வு நீதியராயத்தின் முன்புள்ள கேள்வி யாதெனில், இழப்பீட்டுத் தொகையையும், வட்டி வீதத்தையும் உயர்த்தியளிக்கின்ற 1923-ஆம் ஆண்டு சட்டப்பிரிவு 4 மற்றும் 4(அ)-இன்

கீழான சட்டத்திருத்தமானது, சட்டத்திருத்தம் அமல்படுத்தப்படுவதற்கு முன்பு விபத்து நிகழ்ந்திருக்கக்கூடிய வழக்குகளுக்குப் பொருந்தத்தக்கதா? என்பதாகும். விபத்து நிகழ்ந்த நாளே தரப்பினர்களின் உரிமைகளையும் கடப்பாடுகளையும் தீர்மானிப்பதற்கு உரிய நாளாகும் என்பதே இந்த நாட்டின் பல்வேறு நீதிமன்றங்களால் எடுக்கப்பட்ட ஒரே சீரான நிலைப்பாடு என இந்நீதிமன்றம் குறிப்பிட்டது. **பிரதாப் நரேன் சிங்** என்ற வழக்கில் இந்நீதிமன்றத்தின் தீர்ப்புரையைச் சார்வுற்று நீதிமன்றம், **நீலகண்டன்** என்ற வழக்கின் தீர்ப்புரையை நிராகரித்து, செலுத்தத்தக்க இழப்பீட்டுத் தொகையை உயர்த்தியளிக்கின்ற சட்டத்திருத்தத்தின் பயனானது, அது அமல்படுத்தப்படுவதற்கு முன்பு நிகழ்ந்த விபத்துகளுக்குப் பொருந்தக்கூடியதல்ல என்று தீர்மானித்தது. நீதிமன்றம் தீர்மானித்துள்ளதாவது:

> "4. ஆயினும், நியூ இந்தியா அஷ்ரன்ஸ் கம்பெனி லிமிடெட் -எதிர்- வி.கே. நீலகண்டன் என்ற வழக்கில் இந்நீதிமன்றத்தின் இருவர் அமர்வு நீதியராயம், பணியாளர்கள் இழப்பீடு சட்டம், பணியாளர்களின் நலனுக்கான சிறப்புச் சட்டமாதலால், தீர்ப்பளிக்கப்படும் நாளன்று கிடைக்கக்கூடிய பயனை பணியாளர்களுக்கு விரிவுபடுத்தவேண்டுமேயன்றி, விபத்து நிகழ்ந்த நாள்முதல் செலுத்தத்தக்க இழப்பீட்டை அல்ல என்று கருத்துரைத்தது. எனினும், நீலகண்டன் வழக்கின் இருவர் அமர்வு நீதியராயம் பிரதாப் நரேன் சிங் தியோ என்ற வழக்கின் தீர்ப்புரையைக் கருத்திற்கொள்ளவில்லை. ஏனென்றால், அனுமானிக்கப்பட்டவாறு இது அவர்களின் கவனத்திற்கு

கொண்டுவரப்படவில்லை. அது அவ்வாறிருக்கையில், பிரதாப் சிங் தியோ என்ற வழக்கில் நீதியர் பேராயத்தால் வகுத்துரைக்கப்பட்ட உறுதியான சட்டத்தைக் கருத்திற்கொண்டு பார்க்கையில், நீலகண்டன் என்ற வழக்கில், இருவர் அமர்வு நீதியராயத்தால் தெரிவிக்கப்பட்ட கருத்து சரியானதல்ல."

22. **வல்சலா** என்ற வழக்கின் தீர்ப்புரையின்போது, **ஆலவி** என்ற வழக்கில் கேரள உயர் நீதிமன்றத்தின் முழு அமர்வு நீதியராயத்தின் தீர்ப்புரை, **பிரதாப் நரேன் சிங்** என்ற வழக்கில் "நீதியர் பேராயத்தின் தீர்ப்புரைக்கிணங்கும் அளவுக்கு" உள்ளதாக மூவர் அமர்வு நீதியராயமும் உறுதிசெய்தது. நீதிமன்றம் தீர்மானித்துள்ளதாவது:

"5. *யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் -எதிர்- ஆலவி* என்ற வழக்கில், கேரள உயர் நீதிமன்றத்தின் முழு அமர்வு நீதியராயத்தின் தீர்ப்புரைக்கு எங்களது கவனம் ஈர்க்கப்பட்டது, அதில் முழு அமர்வு நீதியராயம், அதே கேள்வியைத் துல்லியமாக பரிசீலித்து, மேற்குறிப்பிடப்பட்ட இரு தீர்ப்புரைகளையும் ஆராய்ந்தது. பணியாளர் இழப்பீட்டுச் சட்டத்தின் வகையங்களின்கீழ் குறிப்பிடப்பட்டுள்ள உடற்காயங்களின் வகைகளின்படி காயமுற்ற தொழிலாளர் உடற்காயமடைந்த தருணத்திலிருந்து இழப்பீட்டைப் பெறுவதற்குரியவராகிறார் என்றும், செலுத்தக்கூடிய இழப்பீட்டுத் தொகை விபத்து நிகழ்ந்த நாள்முதல் செலுத்தவேண்டுமேயன்றி *1995*-ஆம் ஆண்டு சட்டத்திருத்தத்தின் காரணமாக செலுத்துவதற்குரிய இழப்பீட்டுத்

தொகையை அல்ல என்றும் கருத்துரைத்தது. கேரள உயர் நீதிமன்றத்தின் முழு அமர்வு நீதியராயத்தின் தீர்முடிவு, *பிரதாப் நரேன் சிங் தியோ -எதிர்- ஸ்ரீனிவாஸ் சபதா* என்ற இந்நீதிமன்றத்தின் நீதியர் பேராயத்தின் தீர்ப்புரையுடன் இணங்குமளவிற்கு சரியான சட்டத்தை வகுத்துரைப்பதால் நாங்கள் அதை அங்கீகரிக்கிறோம்."

23. இழப்பீட்டுத் தொகையையும், அதன் வட்டி வீதத்தையும் உயர்த்தி *1995*-ஆம் ஆண்டில் திருத்தப்பட்டவாறான *1923*-ஆம் ஆண்டு சட்டத்தின் பிரிவுகள் *4* மற்றும் *4*அ, *1995*-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் *15*-க்கு முன்னதாக அதாவது, சட்டத்திருத்தத்தின் வகையங்கள் அமல்படுத்தப்பட்ட தேதிக்கு முன்னர் நிகழ்ந்த விபத்துகளினால் நேரிடும் இறப்பு மற்றும் நிரந்தர ஊனம் தொடர்புடைய கோருரிமைகளுக்குப் பொருந்தத்தக்கதா*?* என்பதை **ஆலவி** என்ற வழக்கில், கேரள உயர் நீதிமன்றத்தின் முழு அமர்வு நீதியராயம் தீர்மானிப்பதற்கு கோரப்பட்டது. நீதிமன்றத்தின் முன்புள்ள அனைத்து மேல்முறையீடுகளிலும் செலுத்தத்தக்க இழப்பீட்டின் அளவை உயர்த்தி திருத்தம் செய்யப்பட்ட வகையங்கள் நடைமுறைக்கு வருவதற்கு முன்பே விபத்து நிகழ்ந்துள்ளது மற்றும் உரிமைக் கோரிக்கைகள் ஆணையரால் தீர்வு செய்யப்பட்டன, **பிரதாப் நரேன் சிங்** என்ற வழக்கில், இந்த நீதிமன்றத்தின் தீர்முடிவினைச் சார்வுற்ற நீதிமன்றம், இழப்பீட்டை உயர்த்தி திருத்தம் செய்யப்பெற்ற சட்டம், அத்திருத்தம் நடைமுறைக்கு வந்த பின்னர் நிகழ்ந்த விபத்துகளுக்கு மட்டுமே பொருந்தத்தக்கது என்று தீர்மானித்தது. நீதிமன்றம் தீர்மானித்துள்ளதாவது:

"17. இழப்பீட்டைக் கோருகின்ற உரிமையும், அதை செலுத்துவதற்கான பொறுப்புரிமையும் சட்டத்தாலேயே உருவாக்கப் பட்டுள்ளன. சட்டம் நடைமுறைசார்ந்ததாக இருக்குமானால், அது நிலுவையிலுள்ள வழக்கு நடவடிக்கைகளுக்கு பொருந்தும் என்ற அனுமானமிருப்பதில் ஐயமேதுமில்லை என்பதே நன்கு அறுதியிடப்பட்ட பொருள்விளக்க விதியாகும். சட்டம் நிலைபேறான தன்மையுடையதாக இருக்கும்பட்சத்தில், வழக்கு நடவடிக்கைகளின் தொடக்கத்தில், தரப்பினர்களின் உரிமைகள் வெளிப்படையாகவோ அல்லது அவசியமான குறிப்புரை மூலமாகவோ மாற்றியமைக்கப்பட திட்டமிடப்பட்டனவா? என்ற வினாவைக் குறித்து நீதிமன்றம் ஆராயவேண்டும் என்ற கோட்பாட்டிற்குட்பட்டு, முன்மேவும் தன்மை மீதான பொதுப்படையான அனுமானம் இதுவரையிலும் இருந்துவருகிறது. *நீலி -எதிர்- நாராயண பிள்ளா [(1992) 2 கே.எல்.ஜே. 937, 950]*. 1995-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 15-க்கு முன்பு நிகழ்ந்த விபத்து தொடர்பான இழப்பீட்டை உயர்த்தி தீர்வளிக்கும் வழக்குகளுக்கு சட்டத்திருத்தத்தின் வகையங்கள் செயல்விளைவு கொடுத்து, அதே தேதிக்கு முன்னதாகவே உரிமைக் கோரிக்கை தீர்மானிக்கப்பட்டால், அதற்கு பொருந்தக்கூடிய சட்டம் 1923-ஆம் ஆண்டு பணியாளர் இழப்பீட்டுச் சட்டத்தின் திருத்தியமைக்கப்படாத சட்ட வகையங்களேயாகும். ஆனால்,

(மேற்படி) அசோகன் என்ற வழக்கில் நீதியராயத்தின் தீர்முடிவின்படி *1995*-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் *15*-ஆம் தேதிக்கு முன்பு உரிமைக் கோரிக்கை தீர்வு செய்யப்படவில்லை என்றால், அக்கோருரிமையாளர்கள் சட்டத்திருத்தத்தின் பயனைப் பெறுவர். மாறாக, வழக்கு, *1995*-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் *15*-க்கு முன்னதாகவோ அல்லது அதற்குப் பின்னரோ தீர்வு செய்யப்படுவதைப் பொறுத்தே அதன் பயன் உள்ளது. இது ஒருபோதும் சட்டமன்றத்தின் உட்கருத்தாக இருந்ததில்லை...."

24. **வல்சலா** என்ற வழக்கில், இழப்பீட்டுத் தொகையையும், அதன் வட்டி வீதத்தையும் உயர்த்தி *1923*-ஆம் ஆண்டு சட்டப்பிரிவு *4* மற்றும் *4(அ)*-இல் செய்யப்பட்ட சட்டத்திருத்தம், அத்திருத்தம் அமல்படுத்தப்படுவதற்கு முன்பு நிகழ்ந்த விபத்திற்குப் பொருந்தக்கூடியதா என்பதே நீதியராயத்தின் முன்பாக தெளிவுபட உள்ள கேள்வியாகும். இழப்பீட்டின் அளவை உயர்த்தி திருத்தம் செய்யப்பெற்ற சட்டத்தின் பயன், சட்டத்திருத்தம் அமல்படுத்துவதற்கு முன்பு நிகழ்ந்த விபத்துகளுக்குப் பொருந்தத்தக்கதல்ல என்று நீதியராயம் தீர்மானித்துள்ளது. கற்றறிந்த நீதிமன்ற உதவுநர், **முபாசிர் அகமத்** என்ற வழக்கில் இந்நீதிமன்றத்தின் இருவர் அமர்வு நீதியராயத்தின் தீர்ப்புரையைச் சார்ந்துநிற்க கோரியிருந்தாலும், **முபாசீர் அகமத்** என்ற வழக்கின் தீர்ப்புரையானது, **பிரதாப் நரேன் சிங்** மற்றும் **வல்சலா** என்ற வழக்குகளில் இந்நீதிமன்றத்தின் தீர்ப்புரைகளுக்கு முரணானது என்பதால் இது கட்டுப்படுத்துகின்ற

முன்தீர்ப்பு அல்ல என இந்நீதிமன்றத்தின் பின்னிட்ட தீர்ப்புரையான **ஓரியண்டல் இன்சூரன்ஸ் கம்பெனி -எதிர்- சிபி ஜார்ஜ்**[8] என்ற வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ளது என்று இக்கட்டத்தில் குறிப்பிடுவது போதுமானதாகும்.

25. 1923-ஆம் ஆண்டு சட்டம், சமூக நலம்பயக்கும் சட்டமாகும். மேலும், அச்சட்டத்தின் வகையங்களும், சட்டத்திருத்தங்களும் பயனுரிமையை பணியாளர்களிடமிருந்து பறிக்காதவகையில் பொருள்படுத்தப்படவேண்டும். இச்சட்டம் இயற்றுவதன் நோக்கம் யாதெனில், பணியின் ஆபத்துகளை சந்திக்கும் அல்லது தொழில்ரீதியான அபாயங்களுக்குட்படுத்தப்படும் பொருளாதாரரீதியாக நலிவடைந்தப் பணியாளர்களின் துயர்துடைக்கும்விதமாக மலிவான மற்றும் விரைவான அமைப்பின் மூலம் அவர்களுக்கு பணஞ்சார்ந்த பயன்களை இழப்பீடாக அளிப்பதற்கு வகைசெய்கிறது. 1923-ஆம் ஆண்டு திருத்தச்சட்டம், இழப்பீட்டு முறையை நெறிப்படுத்துவதன் மூலமோ அல்லது பணியாளருக்குச் செலுத்தவேண்டிய இழப்பீட்டுத் தொகையை அதிகரிப்பதன் மூலமோ அதன் சிறப்பு நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக இயற்றப்பட்டுள்ளது.

26. சட்டப்பிரிவு 45, 2009-க்கு முன்பு, பிரிவு 4-இன் விளக்கம் II-இல் உள்ள கருத்தியலான வகையத்தின் அடிப்படையில் ஒரு பணியாளரின் மாத ஊதியம் ரூ.4000/-க்கும் மேலாக உள்ளது என்று நிரூபிக்கும்பட்சத்திலுங்கூட, பணியாளரின் மாத ஊதியத்தின் உச்சவரம்பு ரூ.4,000/- என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. சட்டமன்றம் பகுத்தறிவுக்கு உகந்தவகையில் ஒரு சமூக நலச் சட்டமான 1923-ஆம் ஆண்டு சட்டத்தின் நோக்கத்தைக் கருத்திற்கொண்டு, கருத்தியலான வகையத்தில் அளவை உயர்த்தவில்லை, ஆனால், அதை முற்றிலுமாக நீக்கிவிட்டது என்பதாகும். இத்திருத்தம்,

---

8. (2012) 12 எஸ்.சி.சி. 540

பணிபுரிந்து கொண்டிருக்கும்போது பணியின் நிமித்தமாக ஏற்படும் விபத்துகளுக்கான இழப்பீட்டை அனைத்து பணியாளர்களுக்கும் வகைசெய்யும் *1923*-ஆம் ஆண்டு சட்டத்தின் அடிப்படையாக உள்ள சிறப்பு நோக்கத்தை நிறைவேற்றும்வகையில் உள்ளது. ஒரு பணியாளரின் மாத வருமானத்தின்பேரில் கருத்தியலான உச்சவரம்பு நிர்ணயிக்கப்படுவதை நீக்குவதும், அவர்களால் ஈட்டப்படும் உண்மையான மாத ஊதியத்தின் அடிப்படையில் அவர்களுக்கு இழப்பீட்டை விரிவுப்படுத்துவதுமே சட்டத்திருத்தத்தின் நோக்கமாகும். எனினும், சட்டத்திருத்தம் நடைமுறைக்கு வருவதற்கு முன்பு நிகழ்ந்த விபத்துகளுக்கும் பயனை விரிவாக்குவதற்கும் சட்டமன்றம் திட்டமிட்டது என்பதைச் சுட்டிக்காட்ட ஏதுமில்லை.

27. தனிநபருக்கு பயனளிக்கும் சட்டத்திருத்தங்கள் முன்நாளிட்ட கடந்தகாலத்துக்கு பொருந்துவதாக இருக்கவேண்டுமென்று வாதுரைப்பதற்கு நீதிமன்ற உதவுநர், **வருமான வரித் துறை ஆணையர் -எதிர்- வாடிகா டவுன்ஷிப் பிரைவேட் லிமிடெட்**[9] என்ற இந்நீதிமன்றத்தின் தீர்ப்புரையைச் சார்ந்துநின்றார். அவ்வழக்கில், இந்நீதிமன்றத்தின் தொடர்புடைய அரசமைப்பு ஆயத்தின் முன்புள்ள கேள்வி யாதெனில், *2002*-ஆம் ஆண்டு நிதிச் சட்டப்படி இடைசெருகப்பட்டுள்ள பிரிவு *113*-இன் விலக்குக்கூறு, கடந்தகாலத்துக்கும் பொருந்ததத்தக்கதா? என்பதாகும். வரி ஏய்ப்பைத் தடுப்பதற்கும் அத்தகைய ஆய்வுக்குரிய வழக்குகளில் மதிப்பீடுகளை விரைவுப்படுத்துவதுடன் எளிமையாக்கவும், முடங்கிய மதிப்பீட்டுக்கான திட்டம், நிதிச் சட்டம் *(1995*-ஆம் ஆண்டு ஜூலை *1* முதல் நடைமுறையிலுள்ளது*)* அத்தியாயம் XIV-ஆ-இல் அறிமுகப்படுத்தப்பட்டது. விலக்குக்கூறின்படி, முடங்கிய மதிப்பீடுகளின்பேரில்

---

9. (2015) 1 எஸ்.சி.சி. 1

மேல்வரித்தொகை செலுத்துவது தொடர்பாக ஒரு தேதி குறிப்பிடப்பட்டது. முடங்கிய மதிப்பீட்டுக்கான அத்தியாயம், தன்னிறைவான தொகுப்புமுறைச் சட்டம் என்றும், விலக்குக்கூறின் விளைவு, வரி விதிப்புக்குரியவர் மீது கூடுதல் சுமையை விதிப்பதற்கானது என்றும் இந்நீதிமன்றம் குறிப்பிட்டது. அதன்விளைவாக, விலக்குக்கூறு கடந்தகாலத்துக்கும் பயனளிக்கும்வகையில் செயல்படவில்லை என்று தீர்மானிக்கப்பட்டது. தீர்ப்புரையின்போது, இந்நீதிமன்றம் தீர்மானித்துள்ளதாவது:

> *"30.* சட்டமன்றத்தால் ஒரு பயன் வழங்கப்படுகிறவிடத்து அதனை முழுநிறைவாக்கும்பொருட்டு, கடந்தகாலத்துக்கும் பயனளிப்பதற்கு ஏற்ற விதியை இயற்றுவது என்பது வேறானது என்பதையும் நாங்கள் சுட்டிக்காட்ட விரும்புகிறோம். சட்டமன்றம், வேறுசில நபர்களுக்கு பயன் வழங்கி, அப்பயன் வேறெவருக்கும் அல்லது பொதுமக்களுக்கும் அதற்குரிய பாதிப்பை ஏற்படுத்தாமலும் அத்தகைய பயன் எங்கு அளிக்கப்படவேண்டும் என்பது சட்டம் இயற்றுபவர்களின் நோக்கமாகயிருப்பின், அச்சட்டமன்றம் குறித்த நோக்கத்திற்கு பயன்படும்படியாக இயற்றியிருப்பதாக அனுமானித்து, அது கடந்தகாலத்துக்கும் பயன் அளிப்பதை வேண்டுறுத்தலாம். நடைமுறை வகையங்கள் கடந்தகாலத்துக்கும் பயனுடையன எனக் கருதுவதற்கு இது மிகச் சரியான விளக்கமாகும். இந்திய அரசு -எதிர்- இந்தியன் டொபாகோ அசோசியேஷன் [*(2005) 7* எஸ்.சி.சி. *396*] என்ற வழக்கில் சட்டப்படி அளிக்கப்படும் ஒரு பயன் கடந்தகாலத்துக்கும்

பயனுடையதாக செயல்படுவதாக பொருள்கொள்ளும் சூழலில் நேர்மைநெறிக் கோட்பாடு ஓர் உரிய காரணியாக இருக்க வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. அதே நேர்மைநெறிக் கோட்பாடு, சட்டம் கடந்தகாலத்துக்கும் பயனளிக்கும் தன்மையுடையது என்று தீர்மானிக்க விஜய் -எதிர்- மஉறாராஷ்டிர மாநில அரசு [*(2006) 6* எஸ்.சி.சி. *289*] என்ற வழக்கிலும் பயன்பட்டது. சமூதாயம் முழுவதற்கும் பயனளிக்கின்றவகையில் சட்டம் இயற்றப்படுகின்றபோது, ஒருவகையம் இல்லாத போதிலுங்கூட, சட்டம் கடந்தகாலத்துக்கும் பயனளிக்கும் தன்மையுடையது என்று தீர்மானிக்கப்படலாம் என்று முடிவுசெய்யப் பட்டது. எனினும், நாங்கள் இங்குள்ள அத்தகைய *(*அவ்வாறு இல்லாத*)* எந்தவொரு சூழ்நிலையையும் எதிர்க்கின்றோம்."

28. (i) சட்டமன்றம், ஒரு பயனை சில நபர்களுக்கு வழங்குகிறவிடத்து, (ii) அது வேறுசில நபர்களுக்கோ அல்லது பொதுமக்களுக்கோ அதற்குரிய பாதிப்பை ஏற்படுத்தாமலும் மற்றும் (iii) அத்தகைய பயனை வழங்குவதே சட்டத்தின் உட்கருத்து என்பதாக தெரிகிறவிடத்து, குறித்த நோக்கத்திற்காகப் பொருந்துதல் என்ற அனுமானம் புறந்தள்ளப்படலாம் என்ற இந்நீதிமன்றத்தின் அறுதியிடப்பட்ட முன்தீர்ப்புகளுடன் ஒட்டியேயுள்ளதென இந்நீதிமன்றம் தீர்மானித்தது. *1923*-ஆம் ஆண்டு சட்டத்தின் கீழ் செலுத்தத்தக்க இழப்பீட்டை உயர்த்துகின்ற சட்டத்திருத்தங்கள் பணியாளர்களுக்கு பயனளித்திருந்தாலுங்கூட, உயர் இழப்பீட்டு வீதத்தை அளிக்க அதற்கேற்ற பொறுப்பு பணியமர்த்துநர்கள் மேல் சுமத்தப்படுகிறது. அனுமானிக்கத்தக்க வகையிலான

இக்காரணத்திற்காகவே, இழப்பீட்டு வீதத்தை உயர்த்தியளிக்கும் சட்டத்திருத்தத்தின் பயன், சட்டத்திருத்தம் செயல்பாட்டிற்கு வருவதற்குமுன்பு நிகழ்ந்த விபத்துகளுக்கு பொருந்தத்தக்க பயனை தரவில்லை என்று **வல்சலா** என்ற வழக்கில் இந்நீதிமன்றத்தின் மூவர் அமர்வு நீதியராயமும் **ஆலவி** என்ற வழக்கில் கேரள உயர் நீதிமன்றமும் தீர்மானித்தன. மேலும், நாங்கள் ஏற்கெனவே குறிப்பிட்டுள்ளபடி, சட்டத்திருத்தம் நடைமுறைக்கு வருவதற்குமுன்பு நிகழ்ந்த விபத்துகளுக்கு அதன் பயனை அளிக்கும் சட்டமன்றத்தின் உட்கருத்தை வெளிப்படையாகவோ அல்லது உட்கிடையாகவோ சுட்டிக்காட்டுவதற்கு 2009-ஆம் ஆண்டு சட்டப்பிரிவு 45-இல் எதுவுமில்லை.

29. 1989[10]-ஆம் ஆண்டு இரயில்வே சட்டத்தின் கீழ் செலுத்தத்தக்க இழப்பீட்டினைத் தீர்மானிப்பதற்கு உரிய நாள் குறித்த சட்டநிலைப்பாட்டையும் நாங்கள் சுருக்கமாக குறிப்பிட்டுள்ளோம். 1989-ஆம் ஆண்டு சட்டத்தின் அத்தியாயம் XIII-இல் 'விபத்துகளின் காரணமாக பயணிகளின் இறப்பு மற்றும் உடற்காயத்திற்கு இரயில்வே நிருவாகத்தின் கடப்பாடு' என்ற தலைப்பின்கீழ் பாதிப்பேற்படுத்தும் விபத்துகளின் காரணமாக "வகுத்துரைக்கப்படலாகின்றவாறான" அத்தகைய அளவுக்கு இழப்பீடு செலுத்தும் கடப்பாடு இரயில்வே நிருவாகத்தின்மீது விதிக்கப்பட்டுள்ளது. **ரதி மேனன் -எதிர்- யூனியன் ஆ.ப் இந்தியா**[11] என்ற வழக்கில், இந்நீதிமன்றத்தின் இருவர் அமர்வு நீதியராயத்தின் முன்புள்ள கேள்வி யாதெனில், சட்டத்திருத்தம் நடைமுறைக்கு வருவதற்கு முன்பு நிகழ்ந்த விபத்துகளுக்கும் இழப்பீட்டின் வீதத்தை உயர்த்தியளிக்கும்

---

10. 1989-ஆம் ஆண்டு சட்டம்
11. (2001) 3 எஸ்.சி.சி. 714

சட்டத்திருத்தத்தின் பயனானது விரிவாக்கப்படுமா? என்பதாகும். நீதிமன்றம், 1989-ஆம் ஆண்டு சட்டத்தின் திட்டமுறையை மதிப்பீடுசெய்து, செலுத்தத்தக்க இழப்பீட்டை தீர்மானிப்பதற்கான உரிய நாள் என்பது தீர்ப்பளிக்கப்படும் நாளேயாகும் என்று தீர்மானித்தது. அதைத்தொடர்ந்து, இழப்பீட்டினை உயர்த்தியளிக்கும் சட்டத்திருத்தத்தின் பயன், சட்டத்திருத்தம் நடைமுறைக்கு வருவதற்குமுன்பு நடந்த விபத்துக்கும் விரிவுபடுத்தப்படும். தீர்ப்புரையின்போது, இந்நீதிமன்றம் 1923-ஆம் ஆண்டு சட்டத்திற்கும், 1989-ஆம் ஆண்டு சட்டத்திற்கும் இடையேயான திட்டமுறையை வேறுபடுத்திக் காட்டியதுடன், **பிரதாப் நரேன் சிங்** மற்றும் **வல்சலா** என்ற வழக்குகளில் இந்நீதிமன்றத்தின் தீர்ப்புரைகளின் அடிப்படையில் எழுப்பப்பட்டுள்ள வாதுரையைக் குறித்து பின்வருமாறு குறிப்பிட்டுள்ளது:

> "…….பணியாளர் இழப்பீடு சட்டத்தின் கீழான வகையத்தின் திட்டமுறை, இரயில்வே சட்டத்தின் அத்தியாயம் XIII-இல் குறிப்பிடப்பட்டுள்ள திட்டமுறையிலிருந்து அடிப்படையிலேயே வேறுபடுகிறது. முந்தைய சட்டத்தில், அதில் இணைக்கப்பட்டுள்ள அட்டவணை மூலம் செலுத்தத்தக்க இழப்பீடு சட்டத்திலேயே நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பணியாளர் இழப்பீடு சட்டப்பிரிவு 4, அத்தகைய இழப்பீடு, தொடர்புடைய பணியாளரின் மாத ஊதியத்துடன் இணைக்கப்படவேண்டும் என்பதைக் காட்டுகிறது. பணியாளர் மீது இழப்பீடு செலுத்தும் பொறுப்புரிமை உடற்காயம் ஏற்பட்ட நாளன்றே எழுந்துவிடுகிறதேயன்றி ஆணையர் உத்தரவு பிறப்பிக்கின்றபோதல்ல என்றும் வகைசெய்கிறது. பணியமர்த்துநர்

எவரும் ஒரு மாதத்திற்குள் இழப்பீட்டு நிலுவையைச் செலுத்தவில்லையெனில், பணியமர்த்துநர் வட்டித் தொகையைச் செலுத்துவதோடன்றி உரிய வழக்குகளில் செலுத்தத்தக்க தொகையின் 50% வரையிலான தண்டத் தொகையைச் செலுத்த ஆணையர் உத்தரவிடவேண்டும் என்று பணியாளர் இழப்பீடு சட்டத்தின் பிரிவு 4-அ-இல் ஒரு சட்டவகையம் ஏற்படுத்தப் பட்டுள்ளது. மேற்சொன்ன திட்டமுறையிலும், இரயில்வே சட்டத்தின் அத்தியாயம் XIII-இன் திட்டமுறையிலும் அடங்கியுள்ள கோட்பாடுகள் வெவ்வேறாக உள்ளதால் அதை சமன்படுத்திவிடமுடியாது....."

1923-ஆம் ஆண்டு சட்டம் மற்றும் 1989-ஆம் ஆண்டு சட்டத்தின் திட்டமுறையை வேறுபடுத்திக்காட்டி நீதிமன்றம், **பிரதாப் நரேன் சிங்** மற்றும் **வல்சலா** என்ற வழக்குகளின் தீர்ப்புரைகள், 1989-ஆம் ஆண்டு சட்டத்தின் கோருரிமைகளின்பேரில் எதனையும் கொண்டிருக்கவில்லை என்று தீர்மானித்தது.

30. அண்மையில், இந்நீதிமன்றத்தின் இருவர் அமர்வு நீதியராயம், **யூனியன் ஆ.ப் இந்தியா -எதிர்- ரீனா தேவி**[12] என்ற வழக்கில், 1989-ஆம் ஆண்டு சட்டத்தின் கீழ் இழப்பீட்டைத் தீர்மானிப்பதற்கான உரிய நாள் குறித்து **ரதி மேனன்** மற்றும் **கலண்டி சரண் சாஉறூ -எதிர்- ஜெனரல் மேனேஜர், சவுத் ஈஸ்ட் சென்ட்ரல் இரயில்வே, பிலாஸ்பூர்**[13] **(கலண்டி)** என்ற வழக்குகளின் தீர்ப்புரைகளுக்கிடையேயான வெளிப்படையான முரண்பாட்டைப் பரிசீலித்தது. **ரதி மேனன்** என்ற வழக்கின் தீர்ப்புரை 1989-ஆம் ஆண்டு சட்டத்தின் கீழ் வட்டிச் செலுத்துவதற்கான வகையம் ஏதுமில்லை என்னும் ஊகத்தின்

---

12. (2019) 3 எஸ்.சி.சி. 572
13. (2019) 12 எஸ்.சி.சி. 387

அடிப்படையிலானது என்றும், விபத்து சமயத்தில் நடப்பிலிருக்கும் பணமதிப்பில் இழப்பீடு செலுத்தப்பட்டால் அது நியாயமற்றதாகிவிடும் என்றும் வாதுரைக்கப்பட்டது. இதன் அடிப்படையில்தான் **பிரதாப் நரேன் சிங்** என்ற வழக்கின் தீர்ப்புரை வேறுபடுத்திக் காட்டப்பட்டது. **தாழத்தே புரயில் சரபி -எதிர்- யூனியன் ஆ.ப் இந்தியா**[14] *("தாழத்தே")* என்ற வழக்கில், *1989*-ஆம் ஆண்டு சட்டத்தின் கீழ், கோருரிமையாளர் விபத்து நிகழ்ந்த நாளிலிருந்து சேருகின்ற வட்டியைப் பெறுவதற்கும் உரிமையுடையவராகிறார் என்று தீர்மானிக்கப்பட்டது என இந்நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது. **தாழத்தே** என்ற வழக்கின் தீர்முடிவு, அடுத்ததாக **கலன்டி** மற்றும் **மொஉறமதி -எதிர்- யூனியன் ஆ.ப் இந்தியா**[15] என்ற வழக்குகளிலும் இந்நீதிமன்றத்தால் பின்பற்றப்பட்டது. அதனைத் தொடர்ந்து, *1989*-ஆம் ஆண்டு சட்டத்தின் கீழ் தற்போது வட்டிச் செலுத்த வேண்டியுள்ளதால், **ரதி மேனன்** என்ற வழக்கின் தீர்ப்புரையின் அடிப்படை மாறிவிட்டது என்று இந்நீதிமன்றம் தீர்மானித்துள்ளது. நீதிமன்றம் தீர்மானித்துள்ளதாவது:

> *"15.3. ....விபத்து நிகழ்ந்த நாளிலிருந்து பொறுப்புரிமை வந்தடையும் என்பதே தற்போதைய சூழலில் எடுத்துக்கொள்ளப்படவேண்டிய சட்டமாகும், அந்த நாளன்று பொருந்தக்கூடிய தொகையே வசூலிக்கப்படவேண்டிய தொகையாகும், ஆனால், கோருரிமையாளர் அவ்வப்போது, விபத்து நிகழ்ந்த நாளிலிருந்து தொகை செலுத்தப்படும் நாள்வரையில் நியாயமானதும், நேர்மையானதுமாகக் கருதலாகும்வகையில் அத்தகைய வீதத்தில்*

---

14. (2009) 7 எஸ்.சி.சி. 372
15. (2019) 12 எஸ்.சி.சி. 389

வட்டி பெறுவார் என்பதே எங்களது கருத்தாகும். இத்தறுவாயில், மோட்டார் வாகன விபத்து கோருரிமை வழக்குகளுக்குப் பொருந்தத்தக்க வட்டிவீதம் நியாயமானதும், நேர்மையானதுமாக இருக்கவேண்டுமென தீர்மானிக்கலாம். **வட்டி என்ற கோட்பாடு அறிமுகப்படுத்தப்பட்டுவிட்டாலே, பணியாளர் இழப்பீட்டுச் சட்டத்தின் கோட்பாடுகள் நிச்சயமாகப் பயன்படுத்தப்படலாம். மேலும், (மேற்படி) பிரதாப் நரேன் சிங் தியோ என்ற வழக்கில் நால்வர் அமர்வு நீதியராயத்தின் தீர்ப்புரை முழுமையாகப் பொருந்தும்.** தீர்ப்பாயத்தின் தீர்வளிப்பு நாளன்று பொருந்தத்தக்க திருத்தியமைக்கப்பட்ட இழப்பீட்டுத் தொகை, விபத்து நிகழ்ந்த நாளன்று வட்டியுடன் சேர்த்து நிர்ணயிக்கப்படும் இழப்பீட்டுத் தொகையைவிட குறைவாக உள்ளதாகக் காணப்பட்டால், இரு தொகைகளிலும் அதிகமாக உள்ளதே நலம்பயக்கும் சட்டக் கோட்பாட்டின்பேரில் தீர்வளிக்கப்படவேண்டும்.....

15.4. அதன்படியே, விபத்துக் கோருரிமை வழக்குகளில் உள்ளவாறு அதே முறையில், விபத்து நடந்த நாளன்று பொருந்தத்தக்கவாறு அவ்வப்போது நியாயமானதாகக் கருதப்படலாகும் செலுத்தத்தக்கத் தொகையை வட்டியுடன்சேர்த்து இழப்பீடு செலுத்தவேண்டும் என்று நாங்கள் முடிவுசெய்கிறோம். அவ்வாறு கணக்கிடப்பட்ட தொகை, தீர்ப்பாயத்தின் தீர்வளிப்பு நாளன்றவாறு நிர்ணயிக்கப்பட்ட தொகையைவிட குறைவாகயிருந்தால், இரு தொகைகளில் அதிகபட்சமாக உள்ளதைப் பெறுவதற்குக்

கோருரிமையாளர் உரிமையுடையவராவார் ..... **(மேற்படி) பிரதாப் நரேன் சிங் தியோ என்ற வழக்கில் நால்வர் அமர்வு நீதியராயத்தின் தீர்ப்புரை, இந்த வழக்குப்பொருள் குறித்த ஆய்வை மேற்கொள்வதோடு தற்போதைய சூழ்நிலைக்கு நன்கு பொருந்துகிறது."**

(வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளது)

1989-ஆம் ஆண்டு சட்டத்தின் கீழான இழப்பீடு, விபத்து நிகழ்ந்த நாளை தொடர்புபடுத்தி, செலுத்தவேண்டிய வட்டியுடன் சேர்த்து கணக்கிடவேண்டும் என்று இந்நீதிமன்றம் தீர்மானித்துள்ளது. ஆயினும், கணக்கிடப்பட்ட தொகை, *1989*-ஆம் ஆண்டு சட்டத்தின் கீழ் தீர்ப்பாயத்தின் தீர்வளிப்புத் தொகை நாளன்றவாறு நிர்ணயிக்கப்பட்ட தொகையைவிட குறைவாகயிருப்பின், கோருரிமையாளர் இருதொகைகளிலும் அதிகப்பட்ச தொகையைப் பெறுவதற்குரியவராவார்.

31. **ரதி மேனன்** மற்றும் **ரீனா தேவி** என்ற இரு வழக்குகளின் தீர்ப்புரைகளும் இந்நீதிமன்றத்தின் இருவர் அமர்வு நீதியராயத்தால் வழங்கப்பட்டது. இந்நீதிமன்றம் **ரீனா தேவி** என்ற வழக்கில், **ரதி மேனன்** என்ற வழக்கின் தீர்ப்புரையைக் கருத்திற்கொண்டதோடு, அத்தீர்ப்புரையைத் தொடர்ந்து சட்ட நிலைப்பாட்டில் ஏற்பட்ட மாற்றத்தையும் கருத்திற்கொண்டு, **ரதி மேனன்** மற்றும் **கலந்தி** என்ற வழக்குகளுக்கிடையேயான வெளிப்படையான முரண்பாட்டைத் தீர்வுசெய்தது. இவ்வாறு *1989*-ஆம் ஆண்டு சட்டத்தின் கீழான சட்ட நிலைப்பாடு, இழப்பீட்டைத் தீர்மானிப்பதற்கான உரிய நாள் என்பது விபத்து நாளாகும் என்று இந்நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்பட்ட **பிரதாப் நரேன் சிங்** என்ற வழக்கின் தீர்ப்புரைக்கு நெருங்கிய

தொடர்புடையதாகும். **ரீனா தேவி** என்ற வழக்கின் தீர்ப்புரை, அண்மையில் **யூனியன் ஆ.ப் இந்தியா -எதிர்- ராதா யாதவ்**[16] என்ற வழக்கில் இந்நீதிமன்றத்தால் பின்பற்றப்பட்டது.

32. **பிரதாப் நரேன் சிங்** மற்றும் **வல்சலா** என்ற வழக்குகளில், கூடுதல் தொகையை இழப்பீடாகச் செலுத்துவதைத் தீர்மானிப்பதற்கு ஒரே மாதிரியான சட்ட நிலைப்பாடு 1923-ஆம் ஆண்டு சட்டத்தின் கீழ் இந்நீதிமன்றத்தால் பின்பற்றப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கதாகும். இருவர் அமர்வு நீதியராயமாக உள்ள இந்நீதிமன்றம் **பிரதாப் நரேன் சிங்** மற்றும் **வல்சலா** என்ற வழக்குகளில் வகுத்தமைக்கப்பட்டுள்ள உறுதியான சட்ட நிலைப்பாட்டின்படி கட்டுப்படுத்தப்படுகின்றது. இவ்விரு வழக்குகளின் தீர்ப்புரைகளும் இந்நீதிமன்றத்தின் நீதியர் பேராயத்தால் வழங்கப்பட்டவையாகும். அதன்விளைவாக, செலுத்தவேண்டிய இழப்பீட்டைத் தீர்மானிப்பதற்கான உரிய நாள் என்பது விபத்து நிகழ்ந்த நாளேயாகும், மேலும், 2009-ஆம் ஆண்டு சட்டப்பிரிவு 45-இன் பயன், அது நடைமுறைக்கு வருவதற்குமுன்பு நிகழ்ந்த விபத்துகளுக்கு பொருந்தாது என்று நாங்கள் தீர்மானிக்கின்றோம்.

33. தற்போதைய வழக்கில், விபத்து, 2008-ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 31-ஆம் தேதியன்று, அதாவது 2009-ஆம் ஆண்டு சட்டப்பிரிவு 45 நடைமுறைக்கு வருவதற்குமுன்பு நிகழ்ந்தது. அதனைத் தொடர்ந்து, பிரிவு 4-இன் விளக்கம் II-ஐ நீக்கிய 2009-ஆம் ஆண்டு சட்டப்பிரிவு 45-இன் பயனை தற்போதைய வழக்கில் விரிவுபடுத்தியதில் உயர் நீதிமன்றம் பிழைபுரிந்துவிட்டது. விபத்து நிகழ்ந்த நாளன்றே செலுத்தத்தக்க இழப்பீட்டைத் தீர்மானிப்பதற்கு உயர் நீதிமன்றம் கோரப்படுகின்றது,

---

16. (2019) 3 எஸ்.சி.சி. 410

அந்த நாளன்று மாத ஊதியமாக ரூ.4000/-ஐ கருத்தியலான உச்சவரம்பாகக் கொள்வது பொருந்தத்தக்கதாகும்.

34. விபத்து 2008-இல் நடந்திருந்தபோதிலும், மேல்முறையீடு 12 ஆண்டுகளுக்குப் பின்னர்தான் தீர்மானிக்கப்பட்டுள்ளது. உயர் நீதிமன்றத்தின் திருப்பியனுப்புகை உத்தரவைத் தொடர்ந்து, வா.சா.2-ஆக சாட்சியமளித்த பணியமர்த்துநர், இறந்தவர், தனது பணியாளர் தொகுதியில் சுமார் மூன்று ஆண்டுகள் பணிபுரிந்து வந்ததாகத் தெரிவித்திருந்தார் என்ற பொருண்மையை நாங்கள் கருத்திற்கொள்கிறோம். பணியமர்த்துநர் தனது சாட்சியத்தின்போது, இறந்தவர், உணவுக்கான செலவினங்கள் உட்பட ரூ32,000/-ஐ மாத ஊதியமாகப் பெற்றுவந்தார் என்பதைக் குறிப்பிடுகின்ற மாத சம்பளச் சான்றிதழான வா.சா.ஆ.5-ஐ உரியமுறையில் மெய்ப்பித்திருந்தார். குறிப்பிடத்தக்கவகையில், இழப்பீட்டை உயர்த்தியளிக்கும் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புரைக்கெதிராக எதிர்மேல்முறையீட்டாளர்களால் மேல்முறையீடு ஏதும் தாக்கல் செய்யப்படவில்லை. இந்த விடயத்தைக் கருத்திற்கொண்டு பார்க்கையில், அரசமைப்புச் சட்டத்தின் வகுமுறைக்கூறு 142-இன் கீழ் முழுநிறைவான நீதியை நிலைநாட்டும்பொருட்டு, இந்நீதிமன்றத்தின் உள்ளுறை அதிகாரத்தைச் செலுத்தும்வகையில் உயர் நீதிமன்றத்தால் உத்தரவிடப்பட்ட இழப்பீட்டின் தீர்வளிப்பில் நாங்கள் தலையிட விரும்பவில்லை. மேற்குறிப்பிடப்பட்டபடி சட்டத்தைத் தெளிவுப்படுத்தியதன்பேரில், மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்படுகின்றது.

35. தீர்ப்புரையை முடிக்கும் முன்பு, 2019-ஆம் ஆண்டு அக்டோபர் 14 மற்றும் 2019-ஆம் ஆண்டு நவம்பர் 18 ஆகிய தேதியிடப்பட்ட அலுவலக அறிக்கையின்படி, எதிர்மேல்முறையீட்டாளர்களுக்கு அழைப்பாணை அனுப்புவது முழுமையடைந்துவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது என்பதைக் குறிப்பிடுவது அவசியமாகிறது.

36. மேல்முறையீட்டாளருக்குச் செலுத்தக்கூடிய மொத்த இழப்பீட்டுத் தொகையானது ரூ.8,86,120/- எனவும், அதில் விபத்து நிகழ்ந்த நாள்முதல் ஆண்டுக்கு 12% வட்டித்தொகை செலுத்தப்படவேண்டும் எனவும் அறுதியிடப்பட்டுள்ளது. இழப்பீடு செலுத்தும்படியான பொறுப்புரிமை கூட்டாகவும், தனித்தனியாகவும் இருத்தல்வேண்டும். இழப்பீடானது, எதிர்மேல்முறையீட்டாளர்களால் ஒன்றாம் மற்றும் இரண்டாம் மேல்முறை-யீட்டாளர்களுக்கு கூட்டாகவும், தனித்தனியாகவும் செலுத்தப்படவேண்டும். இவ்வுத்தரவின் சான்றிடப்பட்ட நகல் பெற்றதிலிருந்து இரண்டு மாத காலத்திற்குள் இழப்பீடு செலுத்தப்படவேண்டும். செலவுத்தொகை குறித்த உத்தரவு ஏதுமில்லை.

மாண்புமிகு நீதியரசர் முனைவர் திரு. தனஞ்ஜெய ஒய் சந்திரசூட்

மாண்புமிகு நீதியரசர் திரு. அஜய் ரஸ்தோகி

புது தில்லி,

13.02.2020.

.....

<u>உரிமைத்துறப்பு</u>

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கு பயன்படுத்திக்கொள்வதற்குட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."